**பொ.து.ந.க.எண்.பி10/22810/2008**

**ஆணையாளர் அவர்களின் 26.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :479/2008 பொருள் எண்.1

**ஓய்வூதியம்**

திரு. என்.இராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர், மழைநீர் வடிகால்துறை, அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக பணியிலிருந்து 30.06.1999 முதல் ஓய்வு பெற்றார். தனியர் 33 வருடங்கள் 11 மாதங்கள் 29 நாட்கள் தகுதிப் பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி10/43608/02, நாள்.12.03.2003ன்படி ஓய்வூதியமாக மாதம் ரூ.4825/– மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.2,10,177/– மற்றும் தொகுப்புத் தொகை ரூ.2,42,254/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.1850/எ4/2008, நாள்.08.07.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு:–

| | ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| ஓய்வூதியம் 01.07.1999 முதல் மாதம் | ரூ.5163/– |
| பணிக்கொடை | ரூ.2,24,879/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2065/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.3,098/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,59,199/– |
| குடும்ப ஓய்வூதியம் (மனைவி திருமதி. ரேணுகா) | ரூ.5163/– 14.06.2006 முடிய<br>ரூ.3098/– 15.06.2006 முதல் |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு. என். இராதாகிருஷ்ணன், 30.06.1999 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற செயற்பொறியாளர், மழைநீர் வடிகால்துறை, அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.4825/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.5163/– ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,24,879/– (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தி நான்காயிரத்து எண்ணூற்று எழுபத்தி ஒன்பது மட்டும்) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிக்கொடை ரூ.2,10,177/–யை நேர்செய்து மீதம் ரூ.14,702/–ல் தணிக்கைத்தடை காரணமாக 25 விழுக்காடு ரூ.3,676/– பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.11,026/– (ரூபாய் பதினோறாயிரத்து இருபத்தி ஆறு மட்டும்) வழங்கவும், மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2065/–ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத்தொகை ரூ.2,59,199/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து நூற்று தொன்னூற்று ஒன்பது மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.2,42,254/– சரிசெய்து மீதத் தொகை ரூ.16,945/– (ரூபாய் பதினாறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஐந்து மட்டும்) வழங்கவும் தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5163/–லிருந்து ரூ.3098/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. ரேணுகா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.5163/– 14.06.2006 வரையிலும் அதன் பின்னர் 15.06.2006 முதல் ரூ.3098/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி13/28034/2008**
**ஆணையாளர் அவர்களின் 14.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :480/2008 பொருள் எண்.2

**ஒய்வூதியம்**

டாக்டர் திருமதி. பிருந்தா நிர்மல், மருத்துவ அலுவலர், மண்டலம்–8, அவர்கள் பணியிலிருந்து 30.11.2007 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 29 வருடங்கள் 02 மாதங்கள் 05 நாட்கள் (அ) 58 வரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.1881/எ4/2008, நாள்.22.06.2008 சான்றின்படி, 01.12.2007 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.9,480/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,160/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,96,644/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.நிர்மல்நேசகுமார், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,480/– 05.11.2014 முடியவும், அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 06.11.2014 முதல் ரூ.8,297/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் பிருந்தா நிர்மல், மருத்துவ அலுவலர், மண்டலம்–8, அவர்களுக்கு 01.12.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,480/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீதத் தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,160/– (ரூபாய் மூவாயிரத்து நூற்று அறுபது மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத்தொகை ரூ.3,96,644/– (ரூபாய் மூன்று லட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து ஆறு நூற்று நாற்பத்தி நான்கு மட்டும்) வழங்கவும் தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.9,480/–லிருந்து ரூ.6,320/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு. நிர்மல் நேசகுமார், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.9480/– 05.11.2014 வரையிலும் அதன் பின்னர் 06.11.2014 முதல் குறைக்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.8,297/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இப்பொருளில் இரண்டாவது பத்தியில் மூன்றாவது வரியிலும், கடைசி பத்தியில் கடைசி வரியிலும் ரூ.8,297/– என்பதற்கு பதிலாக ரூ.5,884/– என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :481/2008 பொருள் எண்.3

**ஓய்வூதியம்**

மத்திய கணக்குக் குழுமத்தில் கணக்கு அலுவலராகப் பணிபுரிந்த திருமதி. கே.ஈ. கடும்பாடி அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31/08/2005 பி.ப. முதல் அன்னார் மாவட்ட நடைமுறைநூல் தேர்வில் தேர்சசி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறப்பட வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு ஓய்வுபெற அனுமதிக்கப்பட்டார்.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சான்றிதழ் நி.மு.எண். எ4/0252/06, நாள் 17/02/2006ல் 01/09/2005 முதல் ஓய்வூதியம் ரூ.4330/–ம், பணிக்கொடைத் தொகை ரூ.2,39,729/–ம், ஓய்வூதியத்தில் ஒப்படைப்புத் தொகை ரூ1,81,126/–ம் தனியருக்கு வழங்க சான்றளிக்கப்பட்டது. எனினும், தணிக்கைத் தடை 10(இ)ல், பணியாளர் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்வில் (D.O.M.) தேர்ச்சி பெறாமை குறித்து நிர்வாகமே முடிவு செய்து, பணியாளருக்கு ஓய்வூதியப் பயன்கள் அளிக்ககோரப்படுகிறது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, இது குறித்து அரசுக்கு தெரியப்படுத்தி தளர்வாணைப்பெற காலதாமதம் ஆகும் என கருதப்பட்டதால், அன்னாருக்கு தனியரின் வேண்டுகோளுக்கினங்க, தற்காலிக ஓய்வூதியம் ரூ.3248/–ம் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.1,79,797/–ம் ஆணயரது செயல்முறை ஆணை பொ.து.ந.க. எண்.பி4/4253/06, நாள் 28/06/2006–ன்படி வழங்கப்பட்டது.

தற்போது, தனியருக்கு உயர்நீதிமன்ற ஆணை, WP.No.5765/2008, நாள் 27.03.2008–ன்படி, முழு ஓய்வூதியப் பயன்களையும், ஆணை பெற்ற இரண்டு வாரகாலங்களுக்குள் வழங்க தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.359/2008, நாள் 30/07/2008–ன் மூலம் அன்னாருக்கு வழங்கப்பட்ட வயது முதிர்வு ஓய்வுக்கான ஆணையிலிருந்து ''மாவட்ட நடைமுறை நூல் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெறுவதற்குட்பட்டு'' என்ற வாசகத்தை நீக்கி முழு ஓய்வூதியம் வழங்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியருக்கு திருத்திய ஓய்வூதியப் பயன்கள் வழங்க உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சான்றிதழ், நி.மு.எண். 2678/எ4/2008, நாள் 21/08/2008–ல் சான்றளிக்கப்பட்டுள்ளது.

எனவே, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் 21/08/2008 நாளிட்ட தணிக்கைச் சான்றிதழ்படி திருமதி.கே.ஈ. கடும்பாடி அவர்களுக்கு ஏற்கனவே தற்காலிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.3248/–லிருந்து ரூ.4688/– (ரூபாய் நான்காயிரத்து அறுநூற்று எண்பத்தி எட்டு மட்டும்)–ஆக அதிகரித்து வழங்கவும், பணிக்கொடைத் தொகை ரூ.2,58,324/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி எட்டாயிரத்து முன்னூற்று இருபத்தி நான்கு மட்டும்)–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.1,79,797/–யை நேர் செய்து மீதம் ரூ.78,527/– (ரூபாய் எழுபத்தி எட்டாயிரத்து ஐநூற்று இருபத்தி ஏழு மட்டும்)–ல் தணிக்கைத்தடை காரணமாக 25 விழுக்காடுத் தொகை ரூ.64,581/– (ரூபாய் அறுபத்தி நான்காயிரத்து ஐநூற்று எண்பத்தி ஒன்று மட்டும்) பிடித்தம் செய்து மீதம் ரூ.13,946/– (ரூபாய் பதின்மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஆறு மட்டும்) வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.1,96,063/– (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து அறுபத்து மூன்று மட்டும்) வழங்கவும், தனியரது ஓய்வூதியத்தில் ரூ.1562/–யை தொகுத்து பெறுவதால் அன்னாரது ஓய்வூதியம் ரூ.4688/–லிருந்து ரூ.3126/–ஆக ஓய்வூதியம் குறைத்து வழங்கவும், அன்னாரது காலத்திற்குப்பின் குடும்ப ஓய்வூதியமாக அன்னாரது கணவர் திரு. ஜி. ஜெகதீசன் அவர்களுக்கு ரூ.2813/– 12.08.2012 முதல் வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :482/2008 பொருள் எண்.4

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

மருத்துவர் திருமதி.பி.பாகிரதி, என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/11424/96, நாள்.24.11.1997ன்படி மருத்துவ அலுவலராக 17.12.1997 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

இதன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/11424/96, நாள்.23.12.2001ன்படி 17.12.1997 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டும் மற்றும் 17.12.1999 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டு, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டு கால பணிமுடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01. | மருத்துவர் பி.பாகிரதி | 17.12.1997 | 17.12.1999 | ஏதும் இல்லை |

| 10 ஆண்டு கால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 16.12.2007 | ஏதுமில்லை | --- | 17.12.2007 |

மருத்துவர் திருமதி.பி.பாகிரதி, மருத்துவ அலுவலர், அவர்கள் 17.12.2007 அன்று சாதாரண நிலை ஊதிய விகிதமான ரூ.8000-275-13500ல் ரூ.10,750/- பெற்று வருகிறார்.

கணக்கு அலுவலர் மண்டலம்-6, அவர்களின் 29.07.2008 நாளிட்ட குறிப்புரையில் திருமதி.பி.பாகிரதி, மருத்துவ அலுவலர், அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100-275-14050ல் 17.12.2007 முதல் அடிப்படை ஊதியம் ரூ.11,025/- ஊதியம் நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு-2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வுநிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.03.09.1992ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

தனியர் பத்தாண்டு பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு தேர்வுநிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, மருத்துவர் திருமதி.பி.பாகிரதி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்.6, அவர்களுக்கு 17.12.2007 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.9100-275-14050/- 17.12.2007 முதல் அடிப்படை ஊதியம் ரூ.11,025/- ஊதியமாக நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**ம.அ8.ந.க.எண்.எச்1/466/2005**
**ஆணையர் அவர்களின் 01.09.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :483/2008 பொருள் எண். 5

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

டாக்டர் எஸ்.மணிமொழி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்—8 அவர்கள் 27.04.2005 நாளிட்ட கடிதத்தில் அவர் மருத்துவ அலுவலர் பதவியில் 10 வருட பணிக்காலம் முடித்தமைக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்குமாறு கோரியுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவியில் ஆணையரின் செயல்முறை ஆணை எண். எச்.டி.சி.எண்.1/13003/94, நாள்.31.03.1995ன்படி 19.04.1995 முதல் பணிபுரிந்து வருகிறார். ஆணையரின் 13.03.1999 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 19.04.1995 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 16.06.1999 நாளிட்ட செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/13003/94படி 06.05.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

கணக்கு அலுவலர்—8 அவர்களின் 08.11.2005 நாளிட்ட குறிப்பில் தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் 10 வருட பணிக்காலம் முடித்தமைக்கு 9100—275—14050 என்ற ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியமாக 11025/ஐ 20.04.2005 முதல் வழங்க கருத்துரை தெரிவித்துள்ளார்.

துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்களின் 17.06.2006 நாளிட்ட குறிப்பில் தனியர் 19.04.1995 அன்று பணிநியமனம் செய்யப்பட்டுள்ளதாலும் சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்காததாலும் அன்னாருக்கு 19.04.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்திருக்க வேண்டும் ஆனால் 06.05.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்தற்கான காரணத்தையும் மேலும் தனியர் செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளாரா என்ற விவரத்தினையும் அதன் விவரங்களை பணிப்பதிவேட்டில் பதியுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த இடமான தொற்றுநோய் மருத்துவமனையில் இதற்கான விவரங்களை தெரிவிக்குமாறு உதவி சுகாதார அலுவலர் மூலமாக கோரப்பட்டது.

இயக்குநர் தொற்றுநோய் மருத்துவமனை, அவர்களின் 26.12.2006 நாளிட்ட குறிப்பில் தனியர் தொற்றுநோய் மருத்துவமனையில் பணியில் சேர்ந்தநாள் முதல் மண்டலம்—8க்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட நாள் வரையிலான காலத்திற்கான விடுப்புகள் மற்றும் ஊதிய மில்லா விடுப்புகளுக்கான திருத்திய பதிவுகள் அனைத்தும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனியர் தனது பணிக்காலத்தில் 25.05.1995 மற்றும் 03.05.1996 முதல் 09.05.1996 வரை மற்றும் 14.12.1996 முதல் 21.12.1996 வரை மொத்தம் 16 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நாட்கள் துய்த்துள்ளமையால் 06.05.1997 முதல் ஆணையர் அவர்களின் 16.06.1999 நாளிட்ட செயல்முறை ஆணை எண்.சு.து.ந.க.எண்.சி1/13003/94 படி தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் உதவி நல அலுவலர்—8, அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள 01.07.2006 நாளிட்ட கடிதத்தில் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என தெரிவித்துள்ளார். மேலும் தனியரின் 02.05.2008 நாளிட்ட கடிதத்தில் தனியருடன் பணிநியமனம் செய்யப்பட்ட டாக்டர் பூமா, மருத்துவ அலுவலர், மண்டலம்—9, அவர்கள் செயல் அலுவலர் கணக்கு தேர்வு தேர்ச்சி பெறாமலே தேர்வு நிலை ஊதியம் பெற்றுவருவதாகவும், அதற்கான மன்றத் தீர்மானத்தின் நகல்களை இணைத்து தனக்கும் தேர்வுநிலை ஊதியம் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார். மேலும் தனியர் பணிநியமனம் செய்யப்பட்ட செயல்முறை ஆணையில் தனியர் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு தேர்ச்சி பெறவேண்டும் என குறிப்புகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

எனவே, டாக்டர் எஸ்.மணிமொழி, மருத்துவ அலுவலர், என்பவர் 10 வருட தகுதி பணிக்காலம் முடித்தமைக்கு 9100—275—14050 என்ற தேர்வுநிலை காலமுறை ஊதிய விகிதத்தில் ரூ.11025/— என்ற அடிப்படை ஊதியத்தில் 06.05.2005 முதல் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண். சி4/787/2008**
**ஆணையர் அவர்களின் 29.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :484/2008 பொருள் எண்.6

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

08.02.2008 நாளிட்ட தமது கடிதத்தில் டாக்டர் தரணிலதா, மருத்துவ அலுவலர் அவர்கள் 10 ஆண்டுகள் மருத்துவ அலுவலர் பதவியில் பணி முடித்தமையால் தேர்வு நிலைக்கு செல்ல அனுமதி வேண்டியுள்ளார்.

தனியர் 17.12.2007 அன்று மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்துள்ளார். இவருக்கு சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களது செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/11424/96, நாள்.23.12.2001ன்படி அரசின் உறுதியாக்க ஆணை வெளியிடப்பட்டதையடுத்த பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 17.12.2007 அன்று தேர்வுநிலைக்கு செல்ல தகுதி பெற்றுள்ளார்.

12.05.2008 நாளிட்ட கணக்கு அலுவலர் (சுகாதாரம்) அவர்களின் குறிப்புரையில் டாக்டர் எம்.தரணிலதா, மருத்துவ அலுவலர் அவர்களுக்கு 17.12.2007 முதல் 9100–275–14050 என்ற தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் 11025 என நிர்ணயம் செய்யலாம். மேலும் இம்மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை வழங்க ஊதிய நிர்ணயம் செய்யும் பொருட்டு செயல்முறை ஆணை எண்.பொ.து.ந.க.எண்.இ3/471/96, நாள்.13.01.1999ன்படி மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ அலுவலர் மீது துறை சார்ந்த மற்றும் விழிப்புக்குழு சார்ந்த குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. தண்டனை ஏதும் இல்லை.

தேர்வுநிலை வழங்க பணி விவரம் கணக்கீட்டுத் தாள் துறைத் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை வழங்குவதால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடம் கூடவோ குறையவோ நேரிடாது. இப்பதவி சென்னை மாநகராட்சி பிரிவு –2ன் கீழ் வருகிறது. எனவே மன்றத்தின் அனுமதி பெற்று தேர்வுநிலை வழங்க வேண்டும்.

ஆகவே, டாக்டர்.எம்.தரணிலதா, மருத்துவ அலுவலர் அவர்கள் 10 ஆண்டுகள் இப்பதவியில் 16.12.2007 அன்று பணிமுடித்தமையால் 17.12.2007 அன்று தேர்வுநிலைக்கு செல்ல அனுமதியும் 17.12.2007 முதல் அடிப்படை ஊதியம் 11025 என ரூ.9100–275–14050 என்ற சம்பள விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்1/904/2000**
**ஆணையர் அவர்களின் 13.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :485/2008 பொருள் எண்.7

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற டாக்டர். திருமதி. லலிதா மோகன் மொடுரி, மண்டல அலுவலர் பதவியில் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வுநிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

தனியர் மருத்துவ அலுவலராக 29.01.1970ல் பணியமர்த்தப்பட்டு 03.02.1972 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக HDC FPC/2807/74, படி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் மண்டல அலுவலராக 18.07.1989ல் பதவி உயர்வு பெற்றதை அரசாணை எண். 548/MAWS நாள் 06.12.99ன் படி உறுதியாக்கம் செய்து அரசாணை பெறப்பட்டுள்ளது.

அரசாணை 210. P&AR நாள்.11.03.87ன்படி கீழ் நிலை பதவியின் தேர்வுநிலை காலமுறை சம்பள விகிதமும் உயர்வு பதவியில் அன்னாரது சதாரண நிலை காலமுறை சம்பள விகிதமும் ஒன்றே ஆயின் உயர் பதவியில் தேர்வு நிலைக்கு, கீழ்நிலை பதவயின் தேர்வு நிலை காலத்திலிருந்து பத்து ஆண்டுகள் கணக்கிட்டு உயர்நிலை பதவிக்கான தேர்வுநிலை ஊதியத்தை பொருத்தம் செய்யலாம் என அரசாணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதன்படி கணக்கு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் டாக்டர் திருமதி.லலிதா மோகன் மொடுரி, மண்டல அலுவலர், 29.01.1990 முதல் தேர்வுநிலையில் அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.3400+150 சிறப்பு ஊதியத்தில், தேர்வு நிலை காலமுறை சம்பள விகிதம் ரூ.3000–100–3500–125–4500ல் அனுமதித்து நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணையோ அல்லது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கையோ ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை.

இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்ற நாள். | சம்பளம் இல்லா விடுப்பு நாள் | பத்தாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| டாக்டர் திருமதி.லலிதா மோகன் மொடுரி, மண்டல அலுவலர் | (M.O)29.01.70 S/G M.O. 29.01.1980 | M.O. 03.02.72 | 18.07.1989 | ----- | (G.O.Ms.No. 210P&AR dt 11.03.87) 28.01.90 AN |

| தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| Stoppage of one increment July 2000 | Contempt of court proceedings of The Commissioner F8/376/07dt 31.03.08 cancelled the punishment | ஆம் | 29.01.1990 |

எனவே, டாக்டர் திருமதி லலிதா மோகன் மொடுரி, ஓய்வு பெற்ற மண்டல அலுவலருக்கு மண்டல அலுவலர் பதவியில் அரசாணை எண். 210. P&AR நாள்.11.03.87ன்படி 10 ஆண்டு கால பணியை 28.01.1990 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 29.01.1990 முதல் அடிப்படை சம்பளம் ரூ.3400+150 சிறப்பு ஊதியம் என தேர்வுநிலை கால சம்பளமாக ரூ.3000–100–3500–125–4500 என நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண். சி4/787/2008**
**ஆணையர் அவர்களின் 07.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :486/2008 பொருள் எண்.8

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

08.02.2008 நாளிட்ட தமது கடிதத்தில் டாக்டர் ஆர்.சுமதி, மருத்துவ அலுவலர் அவர்கள் 10 ஆண்டுகள் மருத்துவ அலுவலர் பதவியில் பணி முடித்தமையால் தேர்வு நிலைக்கு செல்ல அனுமதி வேண்டியுள்ளார்.

தனியர் 16.12.2007 அன்று மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்துள்ளார். இவருக்கு சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களது செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/11424/96, நாள்.23.12.2001ன்படி அரசின் உறுதியாக்க ஆணை வெளியிடப்பட்டதையடுத்த பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 17.12.2007 அன்று தேர்வுநிலைக்கு செல்ல தகுதி பெற்றுள்ளார்.

09.06.2008 நாளிட்ட கணக்கு அலுவலர் (சுகாதாரம்) அவர்களின் குறிப்புரையில் டாக்டர் ஆர்.சுமதி, மருத்துவ அலுவலர் அவர்களுக்கு 17.12.2007 முதல் 9100–275–14050 என்ற தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் 11025 என நிர்ணயம் செய்யலாம். மேலும் இம்மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை வழங்க ஊதிய நிர்ணயம் செய்யும் பொருட்டு செயல்முறை ஆணை எண்.பொ.து.ந.க.எண்.இ3/471/96, நாள்.13.01.1999ன்படி மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ அலுவலர் மீது துறை சார்ந்த மற்றும் விழிப்புக்குழு சார்ந்த குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. தண்டனை ஏதும் இல்லை.

தேர்வுநிலை வழங்க பணி விவரம் கணக்கீட்டுத் தாள் துறைத் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை வழங்குவதால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடம் கூடவோ குறையவோ நேரிடாது. இப்பதவி சென்னை மாநகராட்சி பிரிவு –2ன் கீழ் வருகிறது. எனவே மன்றத்தின் அனுமதி பெற்று தேர்வுநிலை வழங்க வேண்டும்.

ஆகவே, டாக்டர்.ஆர்.சுமதி, மருத்துவ அலுவலர் அவர்கள் 10 ஆண்டுகள் இப்பதவியில் 16.12.2007 அன்று பணிமுடித்தமையால் 17.12.2007 அன்று தேர்வுநிலைக்கு செல்ல அனுமதியும் 17.12.2007 முதல் அடிப்படை ஊதியம் 11025 என ரூ.9100–275–14050 என்ற சம்பள விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/2373/2008**
**ஆணையர் அவர்களின் 14.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :487/2008 பொருள் எண்.9

**தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது மண்டல அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. கே.மனோகரி, அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டு கால பணியை 13.01.1990 பிற்பகல் முடித்துள்ளார்கள். மேலும் மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு கால பணியை 13.01.2000 பிற்பகல் முடித்துள்ளார்கள் தனியர் அவர்களுக்கு தேர்வுநிலை கால ஊதியம் மற்றும் சிறப்பு நிலை கால ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

தனியர் மருத்துவ அலுவலராக 10.12.1979 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணிநியமனம் அரசாணை எண்.1894 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் நாள்.13.10.1981ன்படி பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 01.12.1982 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

கணக்கு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் டாக்டர் திருமதி.கே.மனோகரி, மருத்துவ அலுவலர், அவர்களுக்கு 14.01.1990 முதல் தேர்வுநிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.2500+150 சிறப்பு ஊதியம், என தேர்வு நிலை கால சம்பளம் ரூ.2500–75–2800–100–4200ல் நிர்ணயிக்கலாம் என கருத்திசை வழங்கியுள்ளார். அத்துடன் தனியர் 20 ஆண்டு கால பணியை முடித்துள்ள காரத்தினால் கணக்கு அலுவலர் அவர்கள் 14.01.2000 முதல் சிறப்பு நிலை கால சம்பளம் விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.10975+50+300 SP என சிறப்பு நிலை கால சம்பள ரூ.10000–325–15200ல் நிர்ணயிப்பதற்கு கருத்திசை வழங்கியுள்ளார்கள்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு நாள் | பத்தாண்டு பணியை முடித்த நாள் | இருபதாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| டாக்டர் திருமதி. கே.மனோகரி | 10.12.1979 | 01.12.1982 | 1 மாதம் 4 நாட்கள் | 13.01.1990 | 13.01.2000 |

| பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை பெற்ற நாள் | தேர்வு கால மற்றும் சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடயவரா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| ஏதுமில்லை | ------- | ஆம் | 14.01.1990 | 14.01.2000 |

டாக்டர் திருமதி கே.மனோகரி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு கால பணியை 13.01.1990 அன்று பூர்த்தி செய்ததால் தனியருக்கு 14.01.1990 முதல் அடிப்படை சம்பளம் ரூ.2500+150 சிறப்பூதியம் தேர்வு நிலை கால சம்பளமாக ரூ.2500–75–2800–100–4200ல் நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு கால பணியை 13.01.2000ல் பூர்த்தி செய்ததால் தனியருக்கு 14.01.2000 முதல் அடிப்படை சம்பளம் ரூ.10975+50 தனி ஊதியம் +300 சிறப்பூதியம் சிறப்புநிலை கால சம்பளமாக ரூ.10000–325–15200ல் நிர்ணயம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :488/2008 பொருள் எண். 10

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

31.01.2006 முதல் தன்விருப்ப ஓய்வு பெற்ற டாக்டர்.திருமதி.ஷீலா சேகர் அவர்கள் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை H.D.FWC.No.F3/97/84, நாள் 13.08.84ன்படி 24.08.1984ல் சென்னை மாநகராட்சியில் மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டார். அன்னார் 30.01.2006 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரசாணை எண்.1279, H.&.F.W நாள் 25.09.1991ன்படி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை F.W & MCH.C.No.F4/3759/89, நாள் 29.07.1992ல் 24.08.1984 முதல் பணிவரன்முறைபடுத்தியும் 15.12.1986 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அனுமதித்து மன்ற தீர்மானமும் பெறப்பட்டுள்ளது. அன்னாருக்கு 30.08.1994 முதல் தேர்வுநிலை அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

25.08.2008 நாளிட்ட கணக்கு அலுவலரின் கருத்திசைவின்படி அன்னாருக்கு 29.08.2004 பிற்பகல் முதல் 20 ஆண்டுகள் பூர்த்தியடைவதால் 30.08.2004 முதல் சிறப்பு நிலையில் ரூ.10,000–325–15200 என்ற காலமுறை சம்பள விகிதத்தில் ஊதியம் ரூ.11950+175 பிபி+300 சி.ஊ., அனுமதித்து நிர்ணயம் செய்ய பகுதி கணக்கு குழுமம், கணக்கு அலுவலர் கருத்திசைவு பெறப்பட்டுள்ளது. 24.02.2005 நாளிட்ட ந.நி.ம.கு.வ.துறை அரசாணை எண்.31ன்படி உயர் படிப்புக்கான காலம் பணிக்காலமாக கருதி பணப்பயன் 24.02.2005 முதல் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் பணப்பயன் 24.02.2005 முதல் வழங்கப்பட வேண்டும்.

தனியர் மீது பணிக்காலத்தில் விழிப்பு குழுமத்தில் விசாரணையோ, அல்லது துறை ஒழுங்கு நடவடிக்கையோ ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் நிலுவையிலுமில்லை.

| மருத்துவ அலுவலரின் பெயர் | பணிவரன் முறைப்படுத்தப் பட்ட நாள் | தகுதி காண் பருவம் முடித்து அறிவிக்கப்பட்ட நாள் | சம்பளம் இல்லா விடுப்பு நாள் | தேர்வு நிலை வழங்கிய நாள் | தண்டனை | சிறப்பு நிலை வழங்க வேண்டிய நாள். |
|---|---|---|---|---|---|---|
| டாக்டர் ஷீலா சேகர் | 24.08.1984 | 15.12.1986 | 31.05.1991 முதல் 05.06.91 வரை 6 நாட்கள் | 30.08.94 | ஏதுமில்லை | 30.08.04 |

எனவே, டாக்டர் திருமதி. ஷீலா சேகர், தன்விருப்ப ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலருக்கு 29.08.2004 பிற்பகல் முதல் 20 ஆண்டு பூர்த்தியடைவதால் சிறப்பு நிலையில் 10000–325–15200 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் ரூ.11950+175பிபி+300 சி.ஊ., 30.08.2004 முதல் அனுமதிக்கப்பட்டு பணப்பயன் 24.02.2005 முதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண். டி1/259/2007**
**ஆணையர் அவர்களின் 11.07.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :489/2008 பொருள் எண்.11

**பணியமைப்பு**

அரசாணை நிலை எண் 55 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எஸ்–2) துறை நாள் 26.04.1999 ன்படி, சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் 1999 – 2000 ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் துவங்கப்பட்டது.

அந்த கல்வி ஆண்டிலேயே லாயிட்ஸ் ரோட்டில் உள்ள சென்னை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளியில் 04.10.1999 அன்று தொழிற் பயிற்சி நிலையத்தின் ஆறு பாடப் பிரிவுகளில் பிட்டர் மற்றும் மின் பணியாளர் பாடப் பிரிவுக்கு பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டு தொடங்கப்பட்டது.

மன்றத்தீர்மான எண் 161/2000 நாள் 27.04.2000ன்படி வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பதிவு மூப்பு பட்டியல் பெற்று இன சுழற்சி முறைப்படி இரண்டு பாட ஆசிரியர்களும் இரண்டு தொழிற் பயிற்சி ஆசிரியர்களும் கீழ்கண்டவாறு 4 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் தற்காலிகமாக மாதம் ரூபாய் 3,000/– என்ற அடிப்படையில் பணியமர்த்தப்பட்டது.

| வ.எண் | பெயர் | பாடப் பிரிவு | பணியில் சேர்க்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | எம்.கோவிந்தராஜ் | பிட்டர் | 05.06.2000 |
| 2. | டி,ராஜ் மோகன் | பிட்டர் | 05.06.2000 |
| 3. | எஸ்.சுதாகர் | மின் பணியாளர் | 01.06.2000 |
| 4. | கே. ராஜாகுமார் | மின் பணியாளர் | 01.06.2000 |

மன்றத் தீர்மான எண் 364/2000 நாள் 22.06.2000ன்படி, சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசு தொழிற் பயிற்சி நிலைய முதல்வராக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு.பாலையா அருணாச்சலம் அவர்களை தொழிற் பயிற்சி நிலைய பணியிட அனுமதிக்கான அரசின் ஆணையை எதிர்நோக்கி தற்காலிகமாக ரூ.8000/– மாதாந்திர தொகுப்பூதியத்தில் 04.07.2000 அன்று பணியமர்த்தப்பட்டது.

மன்றத் தீர்மான எண் 154/2002 நாள் 24.04.2002ன் படி மேற் கூறிய பணியாளர்கள் பணி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தேவையான தளவாடங்கள் மற்றும் கருவிகள் வாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் தொடர் நிகழ்வு என்பதால் ஜுன் 2001 க்கு பிறகு மேலும் ஓராண்டிற்கு பணி நீட்டிப்பு அனுமதி அளிக்கப்பட்டது. இக்கால கட்டங்களில் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தேவையான தளவாடங்கள் மற்றும் கருவிகள் வாங்கப்படவில்லை, இதில் திரு. ராஜ் மோகன் பிட்டர் செய்முறை ஆசிரியர் 21.01.2002 ல் சாலை விபத்தில் மரணம் அடைந்தார். மற்ற பணியாளர்கள் தொடர்ந்து பணி செய்து வந்தனர்.

மன்றத் தீர்மான எண் 132/2003 நாள் 30.04.2003ன் படி மூன்று தொழிற் பயிற்சி நிலைய ஆசிரியர்களுக்கு ஜுன் 2002 முதல் தொகுப்பூதியம் வழங்க அனுமதியும் மூவரின் பணிகாலம் 01.06.2002 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டு 03.02.2003 முதல் இயந்திர பொறியியல் துறையில் பணியமர்த்தப்பட்டதற்கு அனுமதியும் பின்னேற்பும் இதே போல் முதல்வராக அமர்த்தப்பட்ட நபரின் பணி 04.07.2001 முதல் ஓராண்டுக்கு நீட்டிப்பிற்கு பின்னேற்பும் 04.07.2002 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பும் செய்ய தொழிற் பயிற்சி நிலையம் நடத்த அரசின் முறையான அனுமதியும் பெற உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்கு உட்பட்டு நியமனக்குழு பரிந்துரைத்து மன்றம் அனுமதி அளித்தது. இதன் அடிப்படையில் மூன்று இளநிலை பயிற்சி ஆசிரியர்களும் இயந்திர பொறியியல் துறையில் பணி செய்து வந்தார்கள் . இந்த கால கட்டங்களிலும் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தேவையான தளவாடங்கள் மற்றும் கருவிகள் வாங்கப்படவில்லை.

மூன்று பயிற்சி ஆசிரியர்களும் இயந்திர பொறியியல் துறையில் பணி செய்து வரும் பொழுது இயந்திர பொறியியல் துறையில் பணி செய்யும் தங்களுக்கு அத்துறையிலே தொகுப்பூதியம் வழங்க கேட்டுக் கொண்டார்கள் . அதன் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இயந்திர பொறியியல் துறை வழியாக ஆணையர் அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பதிவு மூப்பு பட்டியல் மூலம் விதிமுறைகளுடன் இவர்களது தேர்வு இருப்பதால், இயந்திர பொறியியல் துறையில் காலியான இடங்களில் பணி செய்ய மன்றத்தின் பின்னேற்பு பெற்றதாலும், தொழிற் பயிற்சி நிலையம் இயங்கும் காலத்தில்

திரும்ப அழைக்கலாம் என்று மேலும் 01.06.2003 முதல் ஓராண்டு பணி நீட்டிப்பு செய்ய கோரப்பட்டு இயந்திர பொறியியல் துறையில் ஏற்கனவே வாங்கும் தொகுப்பூதியம் ரூபாய் 3,000/– இயந்திர பொறியியல் துறை மூலம் வழங்க நிர்வாக அனுமதி மற்றும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு வழங்க ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் துணை ஆணையர் (கல்வி) அவர்களின் மேற்குறிப்பில் தொழிற் பயிற்சி நிலையம் தொடர்ந்து நடத்துவதற்கும்,பணியிடம் ஏற்படுத்தவும் அரசிடம் இருந்து ஆணை பெறப்படாததால் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் தொகுப்பூதியத்தில் பணி புரியும் மூன்று தொழிற் பயிற்சி ஆசிரியர்களையும் மற்றும் முதல்வர் அவர்களையும் உடன் பணியில் இருந்து விடுவிக்கலாம் என்ற பரிந்துரையின் பேரில் ஆணையர் அவர்கள் மேற் கண்ட தொழிற் கல்வி ஆசிரியர்களை 31.10.2003 முதல் பணியில் இருந்து மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு விடுவிக்கலாம் எனவும், அம்மாதத்திற்கு தொகுப்பூதியம் ரூபாய் 3,000/– வழங்கலாம் என ஆணை பெறப்பட்டது.

பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட இளநிலை பயிற்சி அலுவலர்கள் உயர் நீதி மன்ற ஆணை பெற்று மீண்டும் தங்களை பணியில் சேர்த்துக் கொள்ளக்கோரினர். அச்சமயம் அரசாணை எண் 292, ந.நி.ம.கு.வ துறை, (மாந –III) நாள் 06.08.2004 அமல்படுத்தப்பட்டதாலும் உயர் நீதி மன்ற ஆணையை நடை முறைப்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருந்ததாலும் மேற்படி நபர்களை செப்டம்பர் 2004–ம் ஆண்டு ஆணையரின் ஆணை பெற்று மீண்டும் தொழிற் பயிற்சி நிலையத்தில் இளநிலை பயிற்சி அலுவலர்களாக தொகுப்பூதியத்தின் அடிப்படையிலேயே தற்காலிகமாக மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு கல்வித் துறையின் கீழ் மீண்டும் பணியமர்த்தப்பட்டனர். தொழிற் பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள் கிடப்பில் இருந்ததால், மேற்படி பணியாளர்கள் ஆணையரின் ஆணைப்படி மாற்றுப் பணி அடிப்படையில் சென்னை மாநகராட்சியின் முக்கிய பணியின் செயல்பாடுகளான இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 28.12.2004 முதல் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றினர். இப்பணியாளர்களுக்கு ஆணையரின் ஆணையின்படியும் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் செயல் முறை ஆணைபடியும் தொழிற் பயிற்சி ஆசிரியர்களான 1. திரு. எம்.கோவிந்தராஜ் 2. திரு.எஸ்.சுதாகர் மற்றும் 3. திரு.ராஜா குமார் ஆகியோருக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த மாதாந்திர தொகுப்பூதியம் ரூபாய் 3,000/– ஐ அரசாணை 292 ந.நி.ம.கு.வ துறை, (மாந – III) நாள் 06.08.2004 அடிப்படையில் இனி ரூபாய் 5,000/– ஆக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. தொகுப்பூதியம் வழக்கம் போல் கல்வி துறையின் வரவு செலவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன்படி மேற்கண்ட பணியாளர்கள் 08.06.2005 முதல் தொகுப்பூதியம் ரூபாய் 5,000/– பெற்று வந்தனர்.

அரசாணை 292 ன் படி 22 பணியிடங்கள் தற்காலிகமாக மாதாந்திர தொகுப்பூதிய அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டதில் 16 பணியிடங்கள் தொழில் நுட்ப பிரிவுகளுக்கானது. இப்பதவிகளில் முதல்வர் மற்றும் பயிற்சி அலுவலர் பதவிக்கு இளநிலை பயிற்சி அலுவலர்களாகிய திரு. எம்.கோவிந்தராஜ் மற்றும் எஸ்.சுதாகர் இருவரும் தங்களின் கல்வித் தகுதி மற்றும் அனுபவ தகுதியை குறிப்பிட்டு முதல்வர் மற்றும் பயிற்சி அலுவலர் பதவிகளுக்கு பதவியேற்ற முறையில் தங்களுக்கு அளிக்குமாறு கோரினர் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு மாமன்றத்தின் ஆணைப்படி 16.11.2006 முதல் முறையே முதல்வர் மற்றும் பயிற்சி அலுவலர் பதவியில் பணி செய்து வருகின்றனர்.

தொழிற் பயிற்சி நிலைய ஆறு பாடப் பிரிவில் COPA பாட பிரிவில் நாற்பது மாணவர்களை சேர்க்கும் பொருட்டு மத்திய அரசின் அங்கீகாரம் பெறப்பட்டது. அங்கீகார எண் : DGET – 6/22/6/2006-TC நாள் 20.03.2007. இதன்படி தொழிற் பயிற்சி நிலையத்தின் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (COPA) பாட பிரிவு பயிற்சியில் அரசு விதிகளின்படி 40 மாணவ மாணவியர் சேர்க்கை நடைப்பெற்று கடந்த 03.08.2007 அன்று வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்களால் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் பாடப்பிரிவு தொடங்கி வைக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றது.

குழாய் பொருத்துநர் பாடப் பிரிவு தொடங்க ( 1 அலகுக்கு 20 மாணவர் சேர்க்கைக்கு) முதல் கட்ட ஆய்வு மற்றும் இரண்டாம் கட்ட நிலைக்குழு ஆய்வும் முடிந்து மத்திய அரசின் NCVT அனுமதியை எதிர்நோக்கி உள்ளது. இதர நான்கு பாடப் பிரிவிற்கு (பொருத்துநர், மெக்கானிக் மோட்டார் வாகனம், எலெக்ட்ரீசியன், எலெக்ட்ரானிக் மெக்கானிக்) தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் இயந்திர பொறியியல் துறை மற்றும் மின்சாரத்துறை மூலம் கொள்முதல் பணிகள் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பணியில் உள்ள ஆசிரியர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. இதில் பொருத்துனர் மற்றும் மோட்டார் வாகனம் ஆகிய இரண்டு பாட பிரிவுகளுக்கும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல்

பணி நடைபெற்று முடிவடையும் நிலையில் முதல் கட்ட ஆய்வு மேற்கொள்ளும்படி DET-க்கு 05.11.2007 அன்று கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையம் தற்போது ஒரு பாடப் பிரிவுக்கு மத்திய அரசின் NCVT அங்கீகாரம் பெற்று பயிற்சி வகுப்புகள் நடைப்பெற்று வருவதாலும் மேலும் குழாய் பொருத்துநர் பாட பிரிவுக்கு 20 பயிற்சியாளர்கள் சேர்க்கும் பொருட்டு மத்திய அரசின் NCVT அங்கீகாரத்தை எதிர் நோக்கி இருப்பதாலும் பிட்டர் மற்றும் மெக்கானிக் மோட்டார் வாகனம் பாட பிரிவுக்கு முதல் கட்ட ஆய்வுக்கு தயார் நிலையில் இருப்பதாலும் தொழிற் பயிற்சி நிலையம் ஒரு தொடர் நிகழ்வு என்பதாலும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் பணியிடங்களுக்கு அரசிடம் இருந்து அரசாணை பெறப்பட்டு இருப்பதாலும் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்கு உட்பட்டு செயல்படுத்திய கீழ்கண்ட இனங்களுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) தொழிற் பயிற்சி ஆசிரியர்களான 1) திரு. எம். கோவிந்தராஜ் 2) திரு. எஸ். சுதாகர், 3) திரு.ராஜா குமார் மற்றும் முதல்வர் (தொழிற் பயிற்சி நிலையம்) திரு.பாலையா அருணாசலம் அவர்களையும் துணை ஆணையரின் ஆணைப்படி 31.10.2003 முதல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் பணியிலிருந்து மன்றத்தின் பின்னேற்புக்கு உட்பட்டு பணி விடுவிப்பு செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்பும்

ஆ) உயர் நீதி மன்ற ஆணையின் படி மூன்று தொழிற் பயிற்சி ஆசிரியர்களை 01.07.2004 முதல் மீண்டும் மாதம் ரூபாய் 3,000/– தொகுப்பூதியத்தின் அடிப்படையிலேயே தற்காலிகமாக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு பணியமர்த்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பும்

இ) அரசாணை எண் 292 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (மாந–III) நாள் 06.08.2004ன் படி தொழிற் பயிற்சி ஆசிரியர்களான 1. திரு. எம். கோவிந்தராஜ் 2. திரு. எஸ். சுதாகர், 3. திரு. ராஜா குமார் ஆகியோருக்கு தொகுப்பூதியம் ரூபாய் 3,000/–ல் இருந்து 08.06.2005 முதல் ரூபாய் 5,000/– வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பும் வழங்குவதற்கும்

நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

06.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.67/08 நாள்.06.8.08–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

21.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.187/2008 , நாள்: 21.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.து. (ம) ப.க.கு. ஐ.பி.பி. 5 / பி 12 / 2716 / 2007

ஆணையர் அவர்களின் 21.08.2008 நாளிட்ட குறிப்பு

30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :490/2008 பொருள் எண்:12

சென்னை மாநகராட்சி – மாவட்ட குடும்ப நலத்துறை – இந்திய மக்கட் தொகை திட்டம் V – சில்லறைச் செலவினம் மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்க அனுமதி.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட இந்திய மக்கள் தொகை திட்டம் – 5 உலக வங்கி நிதி உதவியின் கீழ் 1989 முதல் ஆகஸ்டு 97 வரை அரசு ஆணை எண் (தொடர்) 835 – சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை – நாள் 26.06.1997 மற்றும் அரசு கடித எண். 38449/EAP/97–6, நாள் 28.08.1997 படி இயங்கி வந்தது. இத்திட்ட காலங்களில் (1989 முதல் ஆகஸ்டு 97 வரை ) பணியாளர்களது சம்பளம் (ம) நலமையங்களில் சில்லறை செலவினங்கள் யாவும் மாநகராட்சிக்கு மானியம் கிடைத்தது. இத்திட்டம் 31.08.1997 ல் முடிவுற்றது.

அரசு ஆணை எண். 271 சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை நாள் 03.03.1993 (ம) அரசு ஆணை எண். 302 சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை நாள் 17.03.1992 ன் படி இந்திய மக்கள் தொகை திட்டம் 5 ல் நலவாழ்வு மையங்களுக்கு சில்லரை செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000/–ம் மருத்துவ மண்டல மையங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6,000/–மும் அறுவை சிகிச்சை அரங்குகளுக்கு ஆண்டுக்கு ரூ. 5,000/–மும் சில்லறைச் செலவீனம் திட்ட காலத்தில் அனுமதிக்கப்பட்டு செலவழிக்கப்பட்டதில் ஆகஸ்டு 1997 வரை மீளப்பெற்று மானியம் கிடைத்தது. 01.09.1997 முதல் 31.03.2001 வரை மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டது. இச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதியும், அரசின் அனுமதியும் பெறப்பட்டது. அரசு ஆணை எண். 79–சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 09.03.2001 மற்றும் மன்ற தீர்மான எண். 366/2001, நாள் 20.07.2001 ன் படி முடிவடைந்த இந்திய மக்கள் தொகை திட்டம் 5 ஐ மறுசீரமைப்பின் மூலம் 01.04.2001 முதல்
பணியாளர்களுக்கு வழங்கப்படும் மொத்த சம்பள செலவினத்தில் ( Salary Only ) மூன்றில் இரண்டு பங்கு தொகை மான்யமாக மாநில அரசிடமிருந்தும் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து ஒரு பங்கு தொகையும் பகிர்ந்து கொள்ள அரசு ஆணை வழங்கியுள்ளது. இவ்வாறு ஆண்டு தோறும் மாநகராட்சிக்கு மாநில அரசின் 2 பங்கு தொகை மானியம் தொடர்ந்து இந்நாள் வரை கிடைத்து வருகிறது.

மேலும், இதர செலவினங்களில் சில்லரைச் செலவினங்கள் உள்பட இவ்வரசாணையில் அளிக்கப்படவில்லை இருப்பினும் மருந்துப் பொருட்களுக்கு ஆகும் செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்க மன்றத் தீர்மான எண். 123/98, நாள் 12.03.98 ன் படி மருந்துப் பொருட்களின் செலவினத்தை ஏற்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் நல மையங்களில் ஸ்கேன் கருவி நிறுவப்பட்டு இயங்கி வரும் விதத்தில் ஆண்டொன்றுக்கு வருவாய் ரூ. 15,00,000/–மும் 24 மணி நேர (மருத்துவ மனை) சிறப்பு வார்டு இயங்கி வரும் நிலையில் இதன் மூலம் வருவாய் ரூ. 20,00,000/–மும் தனியார் கல்லூரிகளின் செவிலியர் பயிற்சிக்காக ஆண்டொன்றுக்கு வருவாய் ரூ. 15,00,000/– வசூல் செய்யப்பட்டு மாநகராட்சி நிதியில் சேர்க்கப்படுகிறது.

எனினும் இந்திய மக்கள் தொகை திட்டம் V ன் கீழ் இயங்கி வரும் நலவாழ்வு மையங்களுக்கு சில்லறை செலவுகளில் பஸ் கட்டணம், நோட்டு (ம) அட்டைகளும் பேறுகால பின்பணி மையங்களில் அறுவை சிகிச்சைக்காக தேவைப்படும் ஆக்சிஜன் சிலிண்டர், அவசர சிகிச்சைக்கு தேவைப்படும் மருந்து பொருட்கள் யாவும் சில்லறை செலவுகளில் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மேலும், நிதி ஆலோசகர் அவர்களின் 12.10.2007 நாளிட்ட குறிப்புரையின் படி 40 நலவாழ்வு மையங்கள், 10 மண்டல மையங்கள், 4 பேறுகால பிண்பணித் திட்ட மையங்கள் 9 அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் தலைமையிடம் சம்பந்தப்பட்ட மராமத்துச் செலவினங்களுக்கு ( Contingent ) வருடத்திற்கு ரூ. 2.50 இலட்சத்திற்கு மட்டுப்படுத்தி, மாமன்றத்திற்கு மீண்டும் திருத்திய குறிப்பு அனுப்பி ஒப்புதல் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கீழ்க்கண்டவாறு மேற்படி மையங்கள் மற்றும் தலைமையிடம் உட்பட வருடத்திற்கு ரூ. 2.50 இலட்சம் செலவழிக்க முறையாக தரப்பட்டுள்ளது.

**மா.கு.ந.து. (ம) ப.க.கு. ஐ.பி.பி. 5 / பி 12 / 2716 / 2007**

| வ. எண் | இனம் | தொகை ரூ. | பை |
|---|---|---|---|
| 01. | 40 ஐபிபி 5 நலவாழ்வு மையங்களுக்கு வருடத்திற்கு ரூ. 3000/– வீதம் 40 X 3000 | 1,20,000 | 00 |
| 02. | 10 மருத்துவ மண்டல மையங்களுக்கு வருடத்திற்கு ரூ. 5000/– வீதம் 10 X 5000 | 50,000 | 00 |
| 03. | 4 பேறு கால பின்பணித்திட்ட மையங்களுக்கு ( PPP ) வருடத்திற்கு ரூ. 6000 வீதம் 4 X 6000 | 24,000 | 00 |
| 04. | 9 அறுவை சிகிச்சை அரங்குகளுக்கு ( STU ) வருடத்திற்கு ரூ. 4000/– வீதம் 9 X 4000 | 36,000 | 00 |
| 05. | தலைமையிடம் சம்பந்தப்பட்ட செலவினங்கள் ஒரு வருடத்திற்கு | 20,000 | 00 |
| | மொத்தம் | 2,50,000 | 00 |

மேற்படி செலவினங்களின்படி, மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் இயங்கும் 40 ஐபிபி –5 நலவாழ்வுமையங்கள், 4 பேறுகால பின்பணித்திட்ட மையங்கள் ( PPP ) 9 அறுவை சிகிச்சை அரங்குகள் ( STU ) 10 மண்டலங்கள் ( Medical Zones ) மற்றும் தலைமையிடம் சம்பந்தப்பட்ட சில்லரைச் செலவினம் ( Contingent Expenses ) மேற்கொள்ள கீழ்க்காணும் பொருட்களுக்கு மன்றத்தின் மேலான அனுமதி வேண்டப்படுகிறது.

1. சில்லரைச் செலவினங்கள் யாவும் செலவு மைய எண். 57 இந்திய மக்கள் தொகை திட்டம் 5 ல் இருந்து செலவு மைய எண். 54 மகப்பேறு (ம) குழந்தை நல திட்டத்திற்கு மாற்றவும்,
2. இந்திய மக்கள் தொகை திட்டம் 5 ன் கீழ் இயங்கும் 40 நலவாழ்வு மையங்களுக்கு தலா ரூ. 3000/– வீதம் ஒரு வருடத்திற்கு செலவிடவும்,
3. 10 மருத்துவ மண்டல மையங்களுக்கு ( Zones ) சில்லரை செலவினம் தலா ஒரு வருடத்திற்கு ரூ. 5000/– வீதம் செலவிடவும்,
4. 4 பேறுகாலப் பின்பணித்திட்ட மையங்களுக்கு ( PPP ) செலவினம் வருடத்திற்கு தலா ரூ. 6000/– வீதம் செலவிடவும்,
5. 9 அறுவை சிகிச்சை அரங்குகளுக்கு (STU) சில்லரைச் செலவினம் ஆண்டொன்றுக்கு தலா ரூ. 4000/– வீதம் செலவிடவும்,
6. தலைமையிடம் (DFWB) சம்மந்தப்பட்ட செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 செலவிடவும்
7. செலவு மைய எண். 54 ன் கீழ் குடும்ப நல திட்ட செலவினம் 302 ஐ புதியதாக சேர்த்திட அனுமதிக்கவும்
8. மேற்காணும் செலவினங்கள் யாவும் கணக்கு தலைப்பு எண். 168, மருத்துவமனை (ம) இதர மருத்துவ செலவுகள், 302 குடும்ப நல திட்ட செலவினம், 337 பயண செலவினம், மற்றும் 338 அச்சுப்பொருள் (ம) எழுது பொருள் ஆகிய கணக்கு தலைப்புகளில் செலவினத்தை வரிசை எண்.1ல் உள்ளவாறு செலவுமைய எண்.54 ன் கீழ் அனுமதிக்கவும்,
9. ஆண்டொன்றுக்கு தோராயமாக செலவினம் ரூ. 2,50,000/– செலவிடவும், நலவாழ்வு மையங்கள், மண்டல அலுவலகங்கள், அறுவைசிகிச்சை அரங்குகள் மற்றும் தலைமையிடம் சம்பந்தப்பட்ட செலவினப்பட்டிகள் (Bills) வரும் நிதியாண்டு 01.04.2008 முதல் அனுமதிப்பதற்கும்,

மேற்காணும் வரிசை எண். 1 முதல் 9 வரையிலான பொருட்களுக்கு நிலைக்குழு(சுகாதாரம்)மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "4.09.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 55/2008, நாள் 4.09.2008-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

மடஅ3.ந.க.எண்.சி1/3202/06

ஆணையர் அவர்களின் 08.08.2008 நாளிட்ட குறிப்பு

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :491/2008 பொருள் எண்.13

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.ஆர்.ராதாகிருஷ்ணன், துப்புரவு பணியாளர், கோட்டம்–39, பகுதி–8, மண்டலம்–3, அவர்கள்18.03.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதக் காரணத்தினால் அடிப்படை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**குற்றச்சாட்டு எண்:1** தாங்கள் 18.03.2000 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரத்தவறியது.

**குற்றச்சாட்டு எண்:2** 30.03.2000, 05.09.2000, 13.08.2001 நாளிட்ட குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்கத் தவறியது.

**குற்றச்சாட்டு எண்:3** தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கண்ணியமிக்க கடமையை செய்ய தவறிவிட்டீர்கள்

பணியாளருக்கு இக்குற்றாச்சாட்டு குறிப்பாணை பதிவு தபால் மூலமாக பணியாளர் வீட்டு விலாசத்திற்கு அனுப்பப்பட்டு பணியாளர் எந்தவித விளக்கமும் சமர்ப்பிக்காத நிலையில் விசாரணை அலுவலர் நியமனம் செய்து உத்தரவு வழங்கி அவ்வுத்திரவின்படி திரு.வி.மணி, உதவி செயற்பொறியாளர், பகுதி–07, அவர்களை விசாரணை அலுவலராக நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

தனியர் கடந்த 30.09.2004 அன்று காலை 11.00 மணிக்கு பகுதி–7, பாரதிதாசன் தெரு, பெரம்பூரில் விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டார். பணியாளர் 30.09.2004 அன்று விசாரணைக்கு ஆஜராகியுள்ளார். விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

**விசாரணை அலுவலரின் குறிப்புரை:1** 18.03.2000 முதல் தனது குடும்ப கடன் சுமையினால் அவதியுற்றிருந்த போது தனது மனைவி எதிர்பாராத விதமாக மரணமடைந்தார். இதன் காரணமாக மனம் உடைந்து மன உளைச்சலால் பாதிக்கப்பட்டேன் என்றும் மேலும் அவரது தாயார் மிகவும் வயதானவர் அவர்களுக்கு உற்றார் உறவினர் எவரும் இல்லாத காரணத்தினால் மிகவும் அவதியுற்று அவர் சொந்த ஊரான தென்காசிக்கு சென்று அங்கு உடல்நிலை சுகமில்லாமல் மஞ்சள் காமாலை நோயினால் அவதியுற்று படுத்த படுக்கை ஆகி அதன்பிறகு அங்குள்ள மருத்துவரிடம் நாட்டு வைத்திய முறையில் சிகிச்சை மேற்கொண்டு குணமடைந்தேன் என்றும் தன் விளக்கத்தில் தெரிவித்துள்ளார். இருப்பினும் 18.03.2000 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்தினால் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**விசாரணை அலுவலரின் குறிப்புரை:** குடும்ப கடன் சுமையினால் அவதியுற்றிருந்தபோது தனது மனைவி எதிர்பாரத விதமாக மரணமடைந்தார். இதன் காரணமாக மனம் உடைந்து மன உளைச்சலால் பாதிக்கப்பட்டு சொந்த ஊரான தென்காசிக்கு சென்ற போது அங்கு உடல்நிலை சரியில்லாமல் மஞ்சள் காமாலை நோயினால் அவதியுற்று, படுத்த படுகை ஆனார் என்றும் அவ்வமயம் 30.03.2000, 05.09.2000,13.08.2001 ஆகிய தேதிகளில் அவருக்கு வழங்கிய குறிப்பாணைக்கு உடல்நிலை தேறாத காரணத்தினால் உடனடியாக விளக்கம் அளிக்க முடியவில்லை என்றும் மேலும் தனது தாயாரை தவிர தன்னுடன் எவரும் இல்லாத காரணத்தினால் உரிய நேரத்தில் குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்க இயலவில்லை. இருப்பினும் முறையாக அளிக்கப்பட்ட குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்க தவறியதன் மூலம் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

**விசாரணை அலுவலரின் குறிப்புரை:** முன்னறிவிப்பின்றி வேலைக்கு வராததால் கண்ணியமிக்க கடமையை செய்யத் தவறியதுடன் அலுவலக பணிக்கு குந்தகம் ஏற்படும் வண்ணம் தான் இருந்துள்ளார். எனவே இக்குற்றச்சாட்டும் நிரூபணமாகிறது.

இவ்விசாரணை அறிக்கை பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டது. தனியர் கூடுதல் விளக்கம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தான் கடந்த 18.03.2000 முதல் தனது குடும்ப கடன் சுமையினால் அவதியுற்றிருந்தபோது தனது மனைவி எதிர்பாராத விதமாக மரணமடைந்து விட்டார். இதன் காரணமாக மனமுடைந்து மன உளைச்சலால் பாதிக்கப்பட்டேன் என்றும் மேலும் தனது தாயார் வயதானவர் அவரால் தன்னிச்சையாக செயல்பட முடியாது என்றும் தனக்கு உற்றார் உறவினர் எவரும் இல்லாத காரணத்தினால் காசிக்குச் சென்று விட்டேன் எனவும் அங்கு தனது உடல்நிலை பாதிக்கப்பட்டு மஞ்சள் காமாலை நோயால் அவதியுற்று படுத்த படுக்கையாகி விட்டேன் எனவும் அதன் பிறகு அங்கு மருத்துவரிடம் நாட்டு மருந்து உட்கொண்டு மஞ்சள் காமாலை நோயிற்கு சிகிச்சை

மேற்கொண்டு தான் பூரண குணமடைந்து விட்டேன் என்றும் கூறியுள்ளார். தன்னை மன்னித்து இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கும்படியும் தன்னை பணியில் சேர்த்துக் கொள்ளும்படியும் கோரியுள்ளார்.

அப்பணியாளரது விளக்கத்தினை ஏற்று அப்பணியாளர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. பணியாளர் இச்செயல்முறை ஆணையைப் பெற்றுக் கொண்டு 22.12.2005 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு தனியரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை அதற்கு தனியரின் விளக்கம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கப்பட்டதில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்ட நிலையில் பணியாளர் வயது முதிர்வின் பொருட்டு 30.06.2006 அன்று ஓய்வு பெற உள்ளதாலும், தனியர் ஒரு 4ம்நிலை ஊழியர் என்பதாலும் தண்டத் தொகையாக ரூ.2500/–ஐ விதித்து அவரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்ய ஆணை வழங்கப்பட்டது.

பணியாளர் பணிக்கு வராத காலமான 18.03.2000 முதல் 21.12.2005 வரை உள்ள காலம் ஓராண்டுக்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வரன்முறைப்படுத்திட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி அரசாணை பெற்று வரன்முறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

பணியாளர் விரும்பினால் இச்செயல்முறை ஆணை கிடைக்கப்பெற்ற 60 தினங்களுக்குள் தலைவர், நியமனக்குழு, சென்னை மாநகராட்சி அவர்களுக்கு மேல்முறையீடு செய்யலாம் எனப் பணியாளருக்கு தெரிவிக்கப்பட்டு அதற்கான செயல்முறை ஆணை அளித்து பணியாளரிடம் கையெழுத்து பெறப்பட்டது. ஆனால் இந்நாள் வரையில், இப்பணியாளர் எங்கு உள்ளார் என தெரியாத காரணத்தினாலும் இப்பணியாளரை தொடர்பு கொள்ள இயலவில்லை என்பதால், இக்கோப்பினை நிலுவையில் வைத்திட உதவி ஆணையாளர் (பொ.நி.ம.ப) அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் பணிக்கு வராத காலம் ஓராண்டு கடந்துவிட்டதால் அரசு விதிகளின்படி 18(2)ஐ தளர்வு செய்ய மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.ஆர்.ராதாகிருஷ்ணன், துப்புரவு பணியாளர், கோட்டம்–39, பகுதி–8, மண்டலம்–3, என்பவர் 30.06.2006ல் ஓய்வு பெற்றவர் பணிக்காலத்தில் 18.03.2000 முதல் 21.12.2005 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்5/2163/2008**
**ஆணையாளர் அவர்களின் 05.09.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :492/2008 பொருள் எண். 14

**தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

திருமதி.பி.பிரபாவதி, அவர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 11.02.1988 அன்று பலநோக்கு சுகாதார பணியாளர் ஆக பணியமர்வு பெற்று இதுநாள் வரை தொடர்ந்து பணி செய்து வருகிறார். தனியரின் தாய்மொழி தெலுங்கு ஆகும். இவர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெற அறிவுறுத்தி அலுவலக குறிப்பாணைகள் வழங்கப்பட்டது. மேலும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் 2005ம் ஆண்டு முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தனியர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறும் பொருட்டு தமிழ்நாடு அரசு தேர்வாணைய குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் 5 முறை கலந்து கொண்டும் தேர்ச்சி பெறவில்லை.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேல் எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் பணி செய்து வருகிறார். தனியரின் வயது 54 ஆகும். இவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் தொடர்ந்து பெறவும், பணி ஓய்வு காலத்திற்கு உரிய பணப்பயன்கள் முழுமையாக பெறவும் தமிழ்மொழி தேர்வில் தேர்சி பெறாததற்காக அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திருமதி.பி.பிரபாவதி, பலநோக்கு சுகாதார பணியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களுக்கு தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :493/2008 பொருள் எண்.15

**மன்ற தீர்மானம் திரும்ப பெறுதல்**

திருமதி காந்தா, நிரந்தர துப்புரவு பணியாளர், இ.எம்.பி.எண்.648633, கோட்டம்–30, பகுதி–6, மண்டலம்–2 என்பவரின் மருமகள் திருமதி ஜோதி என்பவர் 12.08.2000 அன்று தீக்காயங்களுடன் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 23.08.2000 அன்று காலமானதை தொடர்ந்து, அன்னார் அளித்துள்ள வாக்கு மூலத்தின் அடிப்படையிலும் மேற்படி திருமதி காந்தா அவர்களை எப்.1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தாரால் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டு பின்னர் ஜாமினில் விடுதலை செய்யப்பட்டார் என்ற விவரத்தைஆய்வாளர், காவல்துறை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை அவர்களின் கடித எண்.751/2000, நாள்.24.08.2000ன்படி தெரிவித்ததை தொடர்ந்து தனியரை 23.08.2000 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர் ( ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9 (2)ன் கீழ் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது.

1. எப்.1 சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.751/2000 சட்டப்பிரிவு 302 இந்திய தண்டனை சட்டம் கண்ட வழக்கில் 23.08.2000 அன்று கைது செய்யப்பட்டு சென்னை எழும்பூர் 14வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றம் அடைப்பு காவலில் வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.
2. இதுகுறித்து அலுவலகத்திற்கு தகவல் அளிக்காமல், டைபாய்டு காய்ச்சல் என 23.08.2000 முதல்மருத்துவ விடுப்பு கோரியுள்ளார்.
3. தாங்கள் ஒரு அரசு பணியாளராக இருந்தும் உண்மையை மறைத்து பொய்யான தகவல் அளித்தது.
4. 23.08.2000 முதல் பணிக்கு வராமல் சென்னை மாநகராட்சி பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.
5. 23.08.2000 முதல் பணிக்கு வராமல் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கப்படுவதுடன் சென்னை மாநகராட்சி பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றக் குறிப்பாணைக்கு தனியர் கீழ்க்கண்டவாறு விளக்கம் சமர்ப்பித்துள்ளார்.

1. தான் உடல்நிலை சரியில்லாமல் 23.08.2000 முதல் மருத்துவ சிகிச்சை பெற்று கொண்டிருந்தேன் என்றும், அதற்காக மருத்துவ சான்றிதழ் முறைப்படி துப்புரவு ஆய்வாளர் கோட்டம்–30 அவர்களிடம் அளித்துள்ளேன் என்றும் இந்நிலையில் தன் மருமகள் தீக்குளித்து இறந்தது காரணமாக தன்னை போலீசார் கைது செய்தனர் என்றும், ஆகவே தான் பொய்யான தகவலை அளிக்கவில்லை என்றும்,
2. தான் போலீசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டதால் தான், தன்னுடைய பணிக்கு வரமுடியவில்லை என்றும்,
3. மீண்டும் தான் ஜாமீனில் விடுதலையானதும் பணிக்கு வரும் பட்சத்தில் தன்னை தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்ததால் தன்னால் பணிக்கு தொடர்ந்து வரமுடியவில்லை.

மேற்கண்ட தனியரின் விளக்கத்தின் அடிப்படையில் நேர்முக விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்டு 5 குற்றச்சாட்டுகளில் 2 முதல் 5 வரையுள்ள 4 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகின்றது என்றும் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் 7வது கூடுதல் அமர்வு நீதிபதி அவர்கள் தன்னுடைய 04.07.2002 நாளிட்ட தீர்ப்பில்( வழக்கு எண்.101/2001) திருமதி காந்தா என்பவர் குற்றவாளி இல்லை என தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையிலும் விசாரணை அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் அடிப்படையிலும் தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது 17.12.2003 நாளிட்ட செயல்முறை ஆணையில் கீழ்கண்டவாறு இறுதி ஆணை வழங்கப்பட்டது.

<u>ம.அ2.ந.க.எண்.சி3/சி4/769/2000</u>

1) தனியரின் மீது சுமத்தப்பட்ட ஐந்து குற்றச்சாட்டுகளில் முதலாவது குற்றச்சாட்டு மட்டும் கைவிடப்பட்டுள்ளது.

2) குற்றச்சாட்டு இரண்டு முதல் ஐந்து வரையிலான குற்றச்சாட்டுகளை நிரூபணமாகியுள்ளதால் தனியரின் ஊதிய உயர்வை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்திவைக்கப்படுகிறது.

3) தனியர், தற்காலிக பணி நீக்கத்திலிருந்து மீண்டும் பணியில் சேர அனுமதி வழங்கப்பட்டது.

4) தனியர் தற்காலிக பணிநீக்க காலத்திலிருந்து மீண்டும் பணியில் சேரும் வரையிலான காலத்தினை அவருக்கு தகுதியுள்ள விடுப்பாக பாவிக்கப்படுகிறது.

மேற்கண்ட செயல்முறை ஆணையின் மீது தனியர் 26.12.2003 நாளிட்ட மனுவில் நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு செய்தார். இதன் பேரில் நியமனக்குழுவின் 10.08.2004 நாளது தீர்மானம் எண்.259/04ல் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் 5ல் நான்கு குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளது. என்பதனையும் தனியர் விளக்கம் திருப்திகரமாகஇல்லாததையும், கருத்தில் கொண்டு நிர்வாகம் தனியருக்கு வழங்கிய திரண்ட பயனின்றி 2 ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்ததை உறுதி செய்து நியமனக்குழு தீர்மானித்து ஆணையிட்டது.

பின்னர் தனியர் அரசுக்கு சீராய்வு மனு சமர்ப்பித்து தன்னுடைய மனுவினை கருணையோடு பரிசீலிக்குமாறு கோரினார். அரசு ஒழுங்கு நடவடிக்கையின் மூல ஆவணங்களை அரசுக்கு அனுப்புமாறு கோரப்பட்டதற்கிணங்கு, கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது.

அரசு சீராய்வு மனுவினை பரிசீலனை செய்து அரசாணை (ப) எண்.254 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.23.06.2005ல் வெளியிட்டது. அவ்வாணையில் திருமதி காந்தா, துப்புரவுப் பணியாளர், அரசுக்கு அளித்துள்ள 02.12.2004 நாளிட்ட சீராய்வு மனுவில், விசாரணை அலுவலர், கல்வியறிவு இல்லாத தன்னிடம் விசாரணை மேற்கொள்ளும் பட்சத்தில் விவரமறிந்த ஒருவரை முன்நிறுத்தி விசாரணை செய்யாமல் தானாகவே விசாரணையை நடத்தினார் என்றும், மேலும், விசாரணையறிக்கையின் சாராம்சத்தை தனக்கு எடுத்துக் கூறவோ அல்லது விசாரணையறிக்கை நகலினையளித்து தன்னிடம் கூடுதல் விளக்கமோ பெறவில்லை என்றும் விசாரணை அலுவலர் விசாரணையறிக்கையில் காலமான திருமதி ஜோதி அவர்கட்கு முன்னின்று திருமணம் நடத்தி வைத்த ஜோதியின் தாத்தா திரு. அன்பு அவர்களை விசாரிக்காமல், முழுமையடையாத மற்றும் ஒருதலைப்பட்சமாக விசாரித்து விசாரணையறிக்கையில் குற்றத்தை நிரூபணபடுத்தியுள்ளார் என்றும் அவ்வாறு சரிவரவும், முழுமையடையாமலும் விசாரித்து சமர்ப்பித்த விசாரணை அறிக்கையை கருத்திற்கொண்டு தனக்கு நிர்வாகம் அளித்த தண்டனையுடன் கூடிய ஆணையை பரிசீலனை செய்து தண்டனையை ரத்து செய்ய வேண்டி நியமனக்குழு தலைவர் அவர்கட்கு மேல்முறையீடு செய்ததில் நியமனக்குழு இரண்டு வருட திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தத்தை உறுதி செய்து மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டிருந்த அரசாணை அடிப்படை விதி 54 (ஆ)ன்படி தற்காலிக பணி காலத்திலிருந்து மீண்டும் பணிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட இடைப்பட்ட காலங்களை சம்பளத்துடன் கூடிய பணிக்காலமாக கருதி பணி வரன்முறைப்படுத்த விண்ணப்பித்ததை பற்றி ஏதும் தெளிவுபடுத்தாமலும் ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் எனவே, தான் செய்யாத தவறுக்கு அனுபவித்த 15 நாட்கள் சிறை தண்டனை, நீதிமன்ற வழக்கு விசாரணை, தற்காலிக பணிநீக்கம் இவற்றையும் நீதிமன்ற வழக்கு விசாரணையில் நிரபராதி என தீர்ப்பாகி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதையும் தம் மீது ஒரு தலைப்பட்சமாக விசாரணையறிக்கையில் நிரூபணப்படுத்தப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகள் எவ்வகையிலும் பொருத்தமானதல்ல என்பதையும் கருத்திற்கொண்டு தமது மனுவினை பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திருமதி காந்தா, துப்புரவு பணியாளர், சென்னை மாநகராட்சி அவர்களின் சீராய்வு மனு சென்னை மாநகராட்சியால் பணியாளர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு முறை நடவடிக்கை குறித்த மூல ஆவணத்துடன் அரசு கவனமாகப் பரிசீலித்தது, பரிசீலனைக்குப் பின்னர், 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலைப் பணியாளர்கள் ( ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு ) துணை விதிகளில் துணை விதி 9 உட்பிரிவு 3ன்படி விசாரணை அலுவலரின் அறிக்கை குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டு, அவருடைய கூடுதல் விளக்கங்கள் பெறப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தண்டனை அளிக்கும் முன், அவர் அனுப்பும் கூடுதல் விளக்கங்களைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும் என்பது இந்நேர்வில் கடைபிடிக்கப்படவில்லை, ஆதலால் இவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை முறையானதாகக் கருத இயலாத நிலையில், திருமதி காந்தா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டு கால ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை ரத்து செய்து பின்னர் ஒழுங்கு நடவடிக்கையில் வழு ஏற்பட்ட இடத்திலிருந்து மீண்டும் ஒழுங்கு நடவடிக்கையைத் தொடரவும் சென்னை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி காந்தா, நிரந்தர துப்புரவு பணியாளர், இ.எம்.பி.எண்.648633, கோட்டம்–30, பகுதி–6, மண்டலம்–2 அவர்களுக்கு அரசாணை (ப) எண்.254 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.23.06.2005ல் தெரிவித்துள்ளவாறு, ஏற்கனவே திரண்ட பயனின்றி 2 ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட உத்தரவுகள் ரத்து செய்யப்பட்டு மீண்டும் புதியதாக விசாரணை அலுவலரை நியமனம் செய்தும் 28.09.2005 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை தனியருக்கு வழங்கப்பட்டது.

பின்னர் திரு. எஸ். சண்முகபெருமாள் அவர்களை விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு நேர்முக விசாரணை நடத்தப்பட்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அலுவலர், விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள 5 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகவில்லை என்று தெரிவித்துள்ளார். அவ்விசாரணையின் அறிக்கை தனியருக்கு சார்பு செய்து மேல் விளக்கம் பெறப்பட்டது. தனியர், அளித்துள்ள 24.02.2006 நாளிட்ட மேல்விளக்கத்தில் தன்மீது நிர்வாக ரீதியாக எழுப்பப்பட்ட 5 குற்றச்சாட்டுகளில் முதல் குற்றச்சாட்டினை ( 7வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் ) தன்னை நிரபராதி என விடுவித்ததையடுத்து கைவிடப்பட்டது என்றும், தன் மீது எழுப்பப்பட்டுள்ள 2 முதல் 5 குற்றச்சாட்டுகளிலும் தான் அலுவலகத்திற்கு தகவல் அளிக்காமல் உண்மையை மறைத்து சுகாதாரப்பணிக்கு கேடு விளைவித்ததாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு, விசாரணை அலுவலர் அவர்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது என்றும் விசாரணையின்போது, தான் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தன் மீது சுமத்தப்பட்ட 2 முதல் 5 வரையிலான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை என விசாரணை அறிக்கையின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்விசாரணை அறிக்கையின் முடிவினை ஏற்றுக்கொண்டு கூடுதல் விளக்கமாக, தான் சம்பந்தப்படாத கொலை குற்ற வழக்கில் 15 நாட்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு ஜாமீனில் வெளிவந்து அலுவலகத்திற்கு தகவல் அளிக்கும் நிலையில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும் எனவே, அலுவலகத்திற்கு எந்த தகவலும் அளிக்க இயலவில்லை என்றும் உண்மையை மறைக்கவில்லை என்றும், சுகாதாரப் பணிக்கு எந்த குந்தகமும் கேடும் விளைவிக்கவில்லை எனவும் தான் குற்றவாளியல்ல என்று நீதிமன்ற தீர்ப்பினையும், மேலும், இறந்துபோன தன்னுடைய மருமகளும், பேத்தியுமான திருமதி ஜோதி அவர்களின் குழந்தையை வளர்க்கும் பொறுப்பில் தான் உள்ளேன் என்றும், செய்யாத குற்றத்திற்கு 15 நாள் சிறைவாசம், நீதிமன்ற விசாரணை என்று பல்வேறு அலைகழிப்புக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகினேன் என்பதனையும், தான் செய்யும் சுகாதார குறைவான பணியினையும், தன் குடும்ப வறுமை சூழலையும் விசாரணை அறிக்கையின் முடிவினையும் கருத்தில் கொண்டு அரசின் 54 (ஆ) விதிமுறைப்படி தமக்கு சமபளத்துடன் கூடிய பணிவரன்முறைபடுத்திட மிகவும் தாழ்மையுடன் பணிந்து கேட்டுக் கொள்வதாகவும் கூறியுள்ளார். இதனை கவனத்துடனும், கனிவுடனும் பரிசீலனை செய்யப்பட்டது.

திருமதி காந்தா, நிரந்தர துப்புரவு பணியாளர், இ.எம்.பி.எண்.648633, கோட்டம்–30, பகுதி–6, மண்டலம்–2 என்பவர் மீது கொலை குற்ற வழக்கு சம்பந்தமாக விதி 9 (2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை கைவிட்டும் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்த 23.08.2000 முதல் 18.12.2003 வரையிலான காலம் ஓராண்டிற்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18 (2) ஐ தளர்த்தி அரசாணை பெற நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வரன்முறைப்படுத்தப்படும் என தெரிவித்து ஆணையர் அவர்களால் செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி துப்புரவு பணியாளரின் தற்காலிக பணி நீக்க காலமான 23.08.2000 முதல் 18.12.2003 வரையிலான நாட்கள் ஓராண்டிற்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18 (2) ஐ தளர்வு செய்து அரசாணை பெற மன்ற தீர்மான எண்.70/2007 தெரிவித்துள்ளவாறு பெறப்பட்டது.

மேற்படி மன்ற தீர்மானத்துடன் முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்படுவதற்காக வரைவு கடிதம் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டபோது பணியாளர்கள் ஓராண்டுக்கு மேல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை மட்டும் அ.வி.18(2)ஐ தளர்த்த அரசுக்கு முன் மொழிவு அனுப்பப்பட வேண்டும் எனவும் இந்நிகழ்வில் தற்காலிக பணி நீக்க காலத்தை வரன்முறைப்படுத்த ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உள்ளதால் ஆணையரின் ஆணை பெற்று வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய பெறப்பட்ட மன்றத்தின் தீர்மானத்தை திரும்ப பெறப்பட்ட பின் ஆணையரின் உத்தரவு பெற்று வரன்முறை படுத்தப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் நியமன அலுவலர் என்ற முறையில் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உள்ளபடியால் விதி18(2)ஐ தளர்வு செய்ய இந்நிகழ்வில் அரசுக்கு முன்மொழிவு அனுப்ப தேவைப்படாததால் பெறப்பட்ட மன்ற தீர்மான எண்.70/2007, நாள்.25.04.2007ஐ திரும்ப பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண். ஈ3/27948/2008**

**ஆணையர் அவர்களின் 14.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :494/2008 பொருள் எண்.16

**துணை ஆட்சியர் (நிர்வாகம்) பொறுப்பேற்ற விவரம்**

திரு.கே.செல்வமணி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கிருஷ்ணகிரி, அவர்கள் அரசாணை (2டி) எண்.375, வருவாய்த் (பணி–1) துறை, நாள்.17.07.2008ன்படி சென்னை மாநகராட்சியில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) ஆக 06.08.2008 முற்பகல் முதல் பணியேற்ற விவரம், மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண். ஜி4/21633/2008</u>**

**<u>ஆணையர் அவர்களின் 18.07.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :495/2008 பொருள் எண்.17

**<u>பணியமைப்பு</u>**

அரசாணையில் இனிவரும் காலங்களில் அரசுத்துறை மற்றும் அரசை சார்ந்த துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடும்பொழுது 1:5 என்ற விகிதத்தில் வேலை வாய்ப்பு துறையால் அனுப்பப்படும் நபர்களை பணியமர்த்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு:

"For filling up of all categories of posts coming under the purview of Governmnet Departments, Local Bodies (Urban and Rural) Co-operative Institutions, Public Sector Undertakings all Government aided Education Institutions and Government aided Engineering Colleges and Polytechincs, all other private organizations and institutions etc. Employment Exchanges shall sponsor candidates in the ratio of 1:5 "

மேற்படி அரசாணையினை சென்னை மாநகராட்சி நிர்வாகத்திலும் அமல்படுத்திட மாமன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது. ( அரசாணை நகல் இணைக்கப்பட்டுள்ளது)

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி2/3127/98**
**ஆணையாளர் அவர்களின் 20.08.2008 நாளிட்ட குறிப்பு**

**30.09.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :496/2008 பொருள் எண்.18

**வரைவு துணை விதிகளுக்கு திருத்தம்**

சென்னை மாநகராட்சியின் 3ம் மற்றும் 4ம் வகுப்பு பொது நலம் மற்றும் மருத்துவ சார்நிலைப் பணியாளர்களின் வரைவு விதிகள் திருத்தப்பட்டு மன்றத் தீர்மான எண்.369/98, நாள்.29.04.1998ல் ஒப்புதல் பெறப்பட்டது. இவ்வரைவு துணை விதிள் 09.09.1998 நாளிட்ட தினத்தந்தி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டு பின்னர் 27.09.2000 நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது. சிறப்பு பணி அலுவலர் அவர்களின் 02.12.1999 நாளிட்ட குறிப்புரையில் தெரிவித்துள்ளபடி அச்சிடப்பட்ட வரைவு துணை விதிகள் புத்தகம் ஒன்றினை விலை ரூ.10/–என ஆணையர் அவர்களால் விலை நிர்ணயிக்கப்பட்டு இப்பிரதிகளை சென்னை மாநகராட்சி பொது மக்கள் தொடர்பு மையத்தில் விற்பனைக்கு வைக்கவும் மற்றும் இதன் ஒரு நகலை பொது மக்கள் இலவசமாக பார்வையிட ஏதுவாக விசாரணை அலுவலகத்தில் வைப்பதற்கும் சுகாதார துறையை சார்ந்த அலுவலர்களுக்கு தெரிவிக்கும் முகமாக இவ்வரைவு விதிகளில் வெளியிடப்பட்டுள்ள பதவிகளின் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக சேர்ப்பன் அல்லது தவிர்ப்பன ஏதேனும் இருப்பின் அதனை தெரிவிக்க அறிவுறுத்தி மண்டலம் 1 முதல் 10 வரையிலான மண்டல அலுவலர்களுக்கும் அனைத்து துறை தலைவர்களுக்கும் இவ்வலுவலக சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி மருந்தாளுநர் சங்கம் தங்களது கடிதத்தில் வரைவு துணை விதிகளின் தலைமை மருந்தாளுநர் பதவி விடுப்பட்டுள்ளது. என்றும் மருந்து பண்டக சாலை அலுவலர் பதவி வகுப்பு 2ஐச் சார்ந்தது என்றும் ஆனால் இப்பதவி தற்போதைய வரைவு துணைவிதிகளில் வகுப்பு 3ல் இடம் பெற்றுள்ளது. என்றும் தமிழக அரசு மருத்துவ பணிகளில் மருந்தாளுநர் பதவிக்கு மருந்தியல் பட்டயப்படிப்பு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் வரைவு துணை விதிகளில் மருந்தியல் பட்டப்படிப்பு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்றும் இக்குறைபாடுகளை நீக்கக் கோரியுள்ளார்.

இது குறித்து சமர்ப்பிப்பது, அரசாணை 582 நிதி (ஊ.கு) துறை நாள்.1.8.1992 ல் பண்டக காப்பாளார் ( தொற்றுநோய் மருத்துவமனை) பதவி தலைமை மருந்தாளுநராக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மருத்துவ மற்றும் ஊரக சுகாதார இயக்குநர் அவர்களின் கடிதம் (L.Dis.105361/E5/2/97 நாள்3.11.97) ன்படி மருந்தாளுநர்களில் பணிமூப்பு வாய்ந்தவரை தலைமை மருந்தாளுநராக பணி நியமனம் செய்யப்படவேண்டும் என்றும், தலைமை மருந்தாளுநரை மருத்துவ பண்டக சாலை அலுவலராக பணி நியமனம் செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ( The Senior most Pharmacist to be appointed as Chief Pharmacist and Chief Pharmacist post is the feeder cadre to the post of Medical Officer )தற்போது சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் ஒரு தலைமை மருந்தாளுநர் பதவி நடைமுறையில் உள்ளது. (திரு.வி.பி.முருகேசன், தலைமை மருந்தாளுநராக தொற்றுநோய் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்) மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் வரைவு துணை விதிகளில் விடுபட்ட தலைமை மருந்தாளுநர் பதவியை சேர்க்கலாம். மேலும் மருந்தாளுநர் பதவிக்கு மருந்தியல் பட்டப்படிப்புக்கு பதிலாக அரசாணை எண்.2945 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை நாள்.10.12.1975 மற்றும் அரசு கடிதம் எண்.36492/சி1/2007–2 நாள்.30.10.2007 (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை) தெரிவித்த வண்ணம் மருந்தியல் பட்டயப்படிப்பினை தகுதியாக கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட வரைவு துணை விதிகளில் இடம் பெற்றுள்ள மருத்துவ பண்டக சாலை அதிகாரி பதவி அரசு மருத்துவ பிரிவுகளில் வகுப்பு 2 ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சியிலும் வகுப்பு 2ன் கிழ் வகைப்படுத்தக் கோரி சென்னை மாநகராட்சி மருந்தாளுநர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இது குறித்து மருத்துவ கல்வி இயக்குநர், ஊரக சுகாதார இயக்குநர் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு விவரம் கோரப்பட்டுள்ளதால் இப்பதவியினை வரைவு துணை விதிகளில் இருந்து நீக்கம் செய்து தனியே நடவடிக்கை எடுக்கலாம். எனவே, பெறப்பட்ட ஆட்சேபனைகளின்படி வரைவு துணை விதிகளில் சேர்க்கப்பட வேண்டிய பதவி மற்றும் சில பதவிகளுக்கான பணி நியமன முறை மற்றும் கல்வித் தகுதிகளில் திருத்தம் செய்யப்படவேண்டிய இனங்கள் பின்வருமாறு.

**சு.து.ந.க.எண்.சி2/3127/98**

| இனம் எண் | பதவி | வரைவு துணை விதிகளில் உள்ள நியமன முறை (ம) கல்வித் தகுதி | | வரைவு துணை விதிகளில் திருத்தம் செய்ய வேண்டிய நியமன முறை (ம) கல்வித் தகுதி | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | |
| 18 | மருந்தாளுநர் (Pharmacist (Allopathy)) | By Direct Recruitment | Degree in Pharmacy | By Direct Recruitment | Diplamo in Pharmacy (Allopathy) from the recognized institution approved by the Govt. and should be registered with the Pharmacist council. |
| 18 A. | தலைமை மருந்தாளுநர் (Chief Pharmacist) | Post Omitted in Draft Byelaws to be included in the corrected Byelaws. | | By promotion from the Category of Pharmacist Allopathy according to seniority | Diplamo in Pharmacy (Allopathy) from the recognized institution approved by the Govt. |

எனவே மேற்கண்ட வரைவு துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ளவும் திருத்திய வரைவு துணை விதிகளுக்கு அரசின் ஒப்புதல் பெறவும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்